# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

விலை 10/=

30.07.2020 வியாழக்கிழமை




# அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்கமாட்டோம்

## இராவண பலய பிடிவாதம்



**கொழும்பு, ஜூலை 30**

**வடக்கு மக்களின் அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கினால்போதும். அதிகாரப்பகிர்வு அவசியமில்லை. அதனை வழங்குவதற்கு நாம் இடமளிக்கப்போவதுமில்லை என்று இராவண பலய அமைப்பின் பொதுச்செயலாளர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.**

## ஆயுதங்களுடன் 2 இளைஞர்கள் கைது!

**கோப்பாயில் சம்பவம்**

*யாழ்ப்பாணம், ஜுலை 30*

வாள் வெட்டுத் தாக்குதலுக்குத் தயாராக இருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் நேற்று

6

## டிப்பரோடு மோதிய மோ.சைக்கிள்

### குடும்பஸ்தர் பரிதாபச் சாவு!

*சாவகச்சேரி ஜுலை 30*

வரணி மருத்துவமனைக்கு முன்பாக நேற்று புதன்கிழமை மாலை இடம்பெற்ற டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சாவடைந்துள்

6

## வாக்களிப்பு குறையவே வாய்ப்பு!

*கொழும்பு, ஜுலை 30*

பொதுத்தேர்தலில் வாக்களிப்பு குறைவாக இருக்கும் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளரான கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் சூழலால் அதிகளவு வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கக் கூடும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் 83சத வீத வாக்குப்பதிவு இருந்தபோதும்,

6

## ஆசனங்கள் 196 போட்டி 7,452 பேர்

*கொழும்பு, ஜுலை 30*

இலங்கையின் தலைவிதியை தீர்மானிக்கப்போகின்ற நாளாக ஒகஸ்ட் 5 ஆம் திகதி மாறியுள்

6

## 2 ஆம் திகதி நள்ளிரவுடன் பிரசாரங்கள் 'கப்சிப்'!

*கொழும்பு, ஜுலை 30*

பொதுத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 2 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுக்குவரும் நிலையில், பிரதான அரசியல் கட்சிகள் யாவும் இறுதிக்கட்ட பரப்புரைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின்கீழ் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் பொது ஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜ

6

## புதினம் தெரியுமோ?

2012 ல ஒரு சம்பவம். யாழ்ப்பாணத்தில் பிரபலமான மகளிர் கல்லூரி அதிபர் விவகாரமே அது. ஒரு பிள்ளைக்கு இரு தாய் கதை போல, ஒரே கல்லூரிக்கு இருவர் அதிபர்களாக உரிமை கோரினர். ஒருவர் ஏற்கனவே அந்தப் பாடசாலையில் பதில் அதிபராக இருந்தவர். இன்னொருவர் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டவர். திணைக்களத்தால் நியமிக்கப்

6

## தீர்வு கொடுக்காமை எனக்குத் தோல்வியே!

### புலம்புகிறார் ரணில்

*கொழும்பு, ஜுலை 30*

" எனது அரசியல் பயணத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காணமுடியாமல்போனதை ஒரு தோல்வியாகவே கருதுகின்றேன்." என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரமருமான ரணில் விக்கிரம சிங்க தெரிவித்

6







சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

"இலங்கைத் தமிழும் தமிழரும்"

## இணையவழி ஆய்வரங்கில் நாளை

*யாழ்ப்பாணம், ஜூலை 30*

சூம் (Zoom) செயலி வாயிலாக முன்னெடுக்கபட்டு வரும் 20 நாள் இணையவழி ஆய்வரங்கின் ஐந்தாம் நாளாகிய நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ம.இரகுநாதன் இலங்கை நவீனத் தமிழ் இலக்கியம் என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

Zoom meeting '
ID : 477 159 8996
pass word : wts

## மதுபானம் விற்றவர் கைது!

அனுமதியின்றி மதுபானத்தைச் சட்டவிரோதமாக விற்பனை செய்த நபர் ஒருவர் நேற்றைய தினம் அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மது ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய அந்த இடத்தை சுற்றிவளைத்தனர். இதன் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து கால் போத்தல் சாராயம் 106, ஒரு போத்தல் சாராயம் இரண்டு என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யபட்டவர் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டமையுடன், இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தெரிவித்துள்ளார். (ரி2113,6)

# தேர்தல் பிரசாரத்திலும் அரசியல் கலாசாரத்திலும் புதிய மாற்றம்

## பாராட்டு மழையில் ஜனாதிபதி கோத்தாபய

*கொழும்பு, ஜூலை 30*

குறுகிய காலப் பகுதியில் தேர்தல் பிரசாரத்திலும் அரசியல் கலாசாரத்திலும் மேற்கொண்டுள்ள மாற்றத்திற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு களுத்துறை மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை களுத்துறை மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கையில் கலந்துகொண்ட ஜனாதிபதியிடமே மக்கள் மேற்படி தெரிவித்துள்ளனர்.

மேலும், சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் மோதல்கள் இல்லாத புதிய தேர்தல் பிரசாரப்போக்கொன்று நாட்டில் உருவாகியுள்ளது எனவும், அரச மைப்பு மாற்றத்தினூடாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்துமாறும் மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறைந்த வருமானம் பெறுவோருக்கும் பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் தேர்தலின் பின்னர் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், வேட்பாளர் ரோஹித்த அபே குணவர்தனவின் இணையத்தளமும் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ரி-3)

# வேகக் கட்டுப்பாட்டை மீறும் வாகனங்களின் வர்த்தக அனுமதிப் பத்திரங்கள் இரத்து

*கொழும்பு, ஜூலை 30*

அதிக வேகத்துடன் பயணிக்கும் கொள்கலன் உள்ளிட்ட வாகனங்களின் வர்த்தக அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகன விபத்துகள் அதிகரித்துச் செல்வதைக் கவனத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 5 வருடங்களில் கொள்கலன் மற்றும் டிப்பர் வாகனங்களில் மாத்திரம் 1,845 விபத்துகள் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பாரவூர்திகளைக் கவனயீனத்துடன் செலுத்துவதால் இவ்வாறான விபத்துகள் நேரிடுவதாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

போட்டியுடன் வாகனங்களைச் செலுத்துவதாலேயே, அதிக விபத்துகள் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாடுகளுடன், குறித்த வாகனங்கள் பயணிக்க வேண்டும் எனவும் அவ்வாறில்லையெனின், வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட வர்த்தக அனுமதிப்பத்திரத்தையும் இரத்து செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.(ரி2)

# இரு சுயாதீன விசாரணைகள் ஆரம்பம்

## போதைப்பொருளுடன் கைதான சுங்க அதிகாரிகள் தொடர்பில்



*கொழும்பு, ஜூலை 30*

ஐஸ் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதப் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்ட சுங்க அதிகாரிகள் தொடர்பில் இரு சுயாதீன விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுங்க ஆணையாளரினால் அதற்கான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த குழு அறிக்கைகளை ஒருவார காலத்துக்குள் தமக்கு வழங்குமாறும் சுங்க ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்த அறிக்கைகள் ஊடாக குறித்த சம்பவம் தொடர்பில் சாட்சிகள் உறுதி செய்யப்பட்டால், அந்த அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் என்றும் சுங்க திணைக்கள ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். அதற்கு சுங்க ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார் எனவும் கூறியுள்ளார். (ரி2)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினா கட்டமைப்பில் மாற்றம்

*கொழும்பு, ஜூலை 30*

2020ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களுக்கான நேரத்திலும் வினா கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி முதலாம் பகுதி வினாத்தாளுக்கு மேலதிகமாக 15 நிமிடங்களை வழங்குவதற்கும், அத்தோடு இரண்டாம் பகுதியில் உள்ள 3 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதினால் போதுமானது எனவும் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகோதரர்கள் இடையே மோதல் ; காயமுற்ற இருவர் ஆஸ்பத்திரியில்

*கொடிகாமம், ஜூலை 30*

திருப்பிச் செலுத்திய கடனுக்கான பற்றுச்சீட்டைக் கேட்கச் சென்ற போது சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில், இருவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

இந்தத் தாக்குதலில் காயமடைந்தவரின் தாயார் குழுவாக இணைந்து நிறுவனம் ஒன்றில் கடன் பெற்றுள்ளார். அக் கடனை தனது பெறாமகனிடம் கொடுத்து மீளளிப்புச் செய்துள்ளார். கடனைத் திருப்பிச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை வழங்கவில்லை என்று அவரது மகன் விசாரிக்க சென்ற போது, அவர் மீது ஒன்று விட்ட சகோதரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். சாவகச்சேரியிலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 17 வயது மாணவன் ஒருவனே குறித்த சகோதரனை கல்லால் தாக்கியதில் கண்ணில் காயமடைந்த நிலையில் கொயிலாமனைக் கொடிகாமத்தைச் சேர்ந்த சசிகரன் சஞ்சீவன் என்பவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


அத்துடன், சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியை சேர்ந்த இரட்னாயக்க றேமன் எனும் இன்னொரு சகோதரரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2159)

# வயாவிளானின் கசிப்பு உற்பத்தி; ரூபா 50 ஆயிரம் அபராதம்

வயாவிளான் குட்டியப்புலம் பகுதியில் கசிப்பு மற்றும் கோடாவுடன் கைதுசெய்யப்பட்ட நபருக்கு, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தால் ரூபா 50 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றுவளைப்பு நடவடிக்கையின்போது 20 லீற்றர் கோடா மற்றும் 1,500 மில்லிலீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டமையுடன், சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தார். சந்தேகநபர் சான்றுப்பொருளுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். சந்தேகநபர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவருக்கு ரூபா 50ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. (ரி325)




# 10 ஆயிரம் பேருடன் ஆரம்பமாகியது ஹஜ் யாத்திரை

ரியாத், ஜூலை 30

கொரோனா பரவல் காரணமாக மிக இறுக்கமான சுகாதார வழிகாட்டல்களின் கீழ் புனித ஹஜ் யாத்திரை நேற்று ஆரம்பமாகியது. இம்முறை சவுதி அரேபியாவில் உள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 10 ஆயிரம் யாத்திரிகர்களின் பங்கேற்புடன் ஹஜ் ஆரம்பமாகியுள்ளது.

சவுதி அரேபியாவின் மக்கா நகரில் கூடும் யாத்திரிகர்கள், முற்று முழுதான சுகாதார வழிகாட்டல் மற்றும் சமூக இடைவெளியைப் பேணி கடமைகளை ஆரம்பித்துள்ளனர் என்று, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. வருடாந்தம் பல்வேறு நாடுகளிலுமிருந்து சுமார் 2 மில்லியன் (20 இலட்சம்) யாத்திரிகர்களுடன் புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், கொரோனா பரவலை கருத்திற் கொண்டு இம்முறை பத்தாயிரம் பேருடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ரி1)

# ஆப்கன் படைகள் தாக்குதல்; 17 தலிபான்கள் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் பக்டிகா மாகாணத்தில் ஆப்கன் படைகள் நடத்திய தாக்குதலில் 17 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் இராணுவத்தினரின் தரப்பில், ஆப்கானிஸ்தானில் பக்டிகா மாகாணத்தில் செவ்வாய்க்கிழமை இரவு தலிபான்கள் மீது ஆப்கான் அரசுப் படைகள் தாக்குதல் நடத்தின. தலிபான்களும் ராணுவம் மீது தாக்குதல் நடத்தினர். இதில் 17 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர். 20 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலில் ஆப்கன் ராணுவத்தினர் பலர் காயம் காயமடைந்ததுள்ளனர். (ரி1)

## அரிசோனாவின் பழமையான
# பாலத்தில் தீ

அரிசோனாவின் 100 ஆண்டுகள் பழமையான டெம்பே பாலத்தில் சரக்கு ரயில் தடம் புரண்டதையடுத்து, அதில் தீப்பரவல் காரணமாக பாலத்தின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. ரயிலில் அபாயகரமான பொருட்களைக் கொண்டதாக அடையாளப்படுத்தப்பட்ட ஒரு சரக்கு பெட்டி உட்பட பத்து பெட்டிகள் வரை தடம்புரண்டுள்ளன. உள்ளூர் நேரப்படி புதன் கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 90 க்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் செயற்பட்டு தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். எனினும் தீபரவலை அடுத்து 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான இந்த பாலத்தின் ஒருபகுதி முற்றாக எரிந்து தீக்கிரையாகியுள்ளது. விபத்து காரணமாக அரிசோனாவில் வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. (ரி1)





# கொரோனாவின் பிடியில் பிரமாண்ட இயக்குநர்



தெலுங்கு சினிமாவின் பிரம்மாண்ட இயக்குநர் எஸ் எஸ் ராஜமௌலி மற்றும் அவர் குடும்பத்தினருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியாகி இருக்கிறது என அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

எனக்கும் என் குடும்ப உறுப்பினர்களுக்கும் கடந்த சில தினங்களுக்கு முன்பு லேசான காய்ச்சல் ஏற்பட்டது. அதுவே பின்னர் குறைந்துவிட்டது. ஆனாலும் நாங்கள் பரிசோதனை எடுத்துக்கொண்டோம். பரிசோதனை முடிவு எங்களுக்கு லேசான கொரோனா பாசிட்டிவ் என உள்ளது.. மருத்துவர்களின் அறிவுரைப்படி நாங்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

எங்களில் எவருக்கும் எந்த அறிகுறிகளும் தென்படவில்லை. அனைவரும் நலமாக இருக்கிறோம். ஆனாலும் அனைத்து முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்து வருகிறோம். எங்களுக்குள் ஆன்டிபாடி உருவாகும் வரை காத்திருக்கிறோம். அதன் பிறகு நாங்கள் பிளாஸ்மா தானம் செய்யஇருக்கிறோம் என ராஜமௌலி தெரிவித்துள்ளார்.

# பணிக்கு திரும்பிய விஜய் சேதுபதி



எஸ்.பி.ஜனநாதன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் லாபம் படத்தின் முக்கிய அப்டேட்டை நடிகர் விஜய் சேதுபதி வெளியிட்டு உள்ளார்.

நடிகர் விஜய் சேதுபதியின் சொந்தத் தயாரிப்பு நிறுவனமான விஜய் சேதுபதி புரொடக்‌ஷன்ஸ் மற்றும் இயக்குநர் ஆறுமுககுமாரின் 7சி.எஸ். எண்டர்டெயின்மெண்ட் இணைந்து தயாரித்துள்ள படம் “லாபம்”. கமர்ஷியல் கலந்து உருவாகி இருக்கும் இப்படத்தை எஸ்.பி. ஜனநாதன் இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில் விஜய் சேதுபதி நாயகனாக நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக சுருதிஹாசன் நடித்துள்ளார். ஜெகபதிபாபு, கலையரசன் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். டி.இமான் இசையமைக்கும் இந்த படத்திற்கு ராம்ஜி ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில், லாபம் படத்தின் முக்கிய அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி லாபம் படத்திற்கான டப்பிங் பணிகளை நடிகர் விஜய் சேதுபதி தொடங்கி உள்ளார். இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

## முரளியின் சகோதரருக்கு ஆதரவாக வாக்கு கேட்ட ஜயசூரிய

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் முத்தையா பிரபாகரனுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளார்.

நுவரெலியாவில் இன்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சனத் ஜயசூரிய, முத்தையா பிரபாகரனுக்கு ஆதரவாக கருத்துகளை வெளியிட்டிருந்தார்.

முத்தையா பிரபாகரன், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும் முத்தையா முரளிதரனின் சகோதரரும் என்பதும் குறிப்பிடத்தக்கது. கூட்டத்தில் உரையாற்றிய சனத் ஜயசூரிய, முத்தையா பிரபாகரனுக்கு வாக்களிக்குமாறு தமிழில் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## முதலாம் தர மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

முதலாம் தரத்தில் இணைத்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சட்ட ரீதியான அனுமதி கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 35 முதல் 40 வரையான மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் டலஸ் அலகப்பெரும தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பொதுத் தேர்தலின் பின்னர் அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர் உதவியாளர்களை இணைத்துக்கொள்ளும் அடிப்படையில் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ரி2)

# போரில் புலிகளுக்கு இணையாக மக்களுக்கும் சேதங்கள்

### ஒத்துக்கொள்கிறார் சஜித வாஸ் குணவர்த்தன



கொழும்பு, ஜூலை 30

பொதுமக்களுக்கு இழப்பின்றி இறுதிக்கட்டப் போர் நடத்தப்பட்டது என்பதை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளுக்கு இணையாக பொதுமக்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பரணகம விசாரணைக் குழுவின் அறிக்கையில், 22 ஆயிரம் பேர் காணாமல் போயிருக்கின்றமை குறித்து மூன்று பிரிவுகளாக கூறப்பட்டுள்ளதை காணமுடியும். இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்கள், புலிகளால் பிடிக்கப்பட்டு காணாமல்போனவர்கள், யார் பிடித்தார்கள் என்று தெரியாமல் காணாமல் போனவர்கள் என மூன்று பிரிவுகள் இருக்கின்றன. போருக்குப் பின்னர் எங்களுக்கு ஒரு தெளிவான வழிகாட்டுதல் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாததால், நாங்கள் இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் போராடினோம். இறுதியில், ஆபிரிக்க நாடுகளும் சீனாவும் மட்டுமே எங்களுடன் இருந்தன என்று அவர் தெரிவித்துள்ளார். (ரி1)

### என்னாலேயே போர் வெற்றி சாத்தியம்

# மாவிலாறை கூட கைப்பற்றும் எண்ணம் மஹிந்தவுக்கு இல்லை

### சரத் பொன்சேகா சாடல்



தான் உட்பட படையினரின் நடவடிக்கைகள் காரணமாக கிடைத்த போர் வெற்றியை ராஜபக்சவினர் தமது இலாபத்திற்காக பயன்படுத்திக் கொண்டனர் என்று முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாவிலாறை கூட கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் தேர்தல் பிரசாரம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பூரை கைப்பற்றினர் என்று கூறி 20 கிலோகிராம் எடை கொண்ட கேக்கை வெட்டினார்கள். 2007ஆம் ஆண்டு ஜூலை 25ஆம் திகதிக்குள் நான் கிழக்கு மாகாணத்தை கைப்பற்றி விட்டேன். அப்போது வெற்றியைக் கொண்டாட நாங்கள் சிறிய கேக் ஒன்றை வெட்டினோம்.

இதனையடுத்து போர் முடிவுக்கு வந்த இரண்டு வருடங்களும் ஒன்பது மாதங்களும் கடந்த பின்னரும் கேக் வெட்டினர். இதன் பின்னர் ராஜபக்சவினர் போர் வெற்றியை தமது இலாபத்திற்கு பயன்படுத்திக் கொண்டனர். மாவிலாறை கைப்பற்ற முடியும் என்று கூட அவர்கள் நினைத்திருக்கவில்லை என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (ரி1)



## தென்மராட்சியில் டெங்கு அபாயம்

சாவகச்சேரி ஜூலை 30

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வாரம் பெய்த மழை காரணமாக டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. பிரதேச மக்கள் வழமை போல தமது காணிகள் குடியிருப்புகள் போன்றவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாக் கூடிய நீர் ஏந்து பொருள்கள் காணப்படின், அவற்றை அப்புறப்படுத்தி டெங்கு பரவாமல் தடுக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த வருடம். ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் பெய்த மழையின்போது மக்கள் போதிய அக்கறை செலுத்தாமையால் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் டெங்குவினால் பீடிக்கப்பட்டனர். இதனால் மத்திய சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டு அலகு தென்மராட்சி பிரதேசத்தை அதி உச்ச டெங்கு அபாய பிரதேசமாக அறிவித்திருந்தது.

இதையடுத்து சுகாதார அமைச்சின், டெங்குகட்டுப்பாட்டு அலகினர் வடமாகாண சுகாதாரத் திணைக்களம் தென்மராட்சி பிரதேச செயலகம் , படையினர்,பொலிஸார் ,உள்ளூராட்சி சபையினர், கிராம சுகாதாரக் குழுவினர் , போன்றோர் கடந்த வருடம் மேற்கொண்ட பரிசோதனைகளுக்கு பிரதேச மக்கள் வழங்கிய ஒத்துழைப்பின் பயனாக டெங்குவின் தாக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தமுடிந்தது. மக்கள் தொடர்ந்தும் இவ்வாறான ஒத்துழைப்பை வழங்கும்பட்சத்தில் இவ்வருடம் டெங்குவின் பாதிப்பிலிருந்து விடுபட முடியுமெனவும் சுகாதார திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (ரி -19)

## கருஞ்சிறுத்தை உயிரிழப்பு, சோபித தேரர் மனுத் தாக்கல்

பொறியில் சிக்கி கருஞ்சிறுத்தை உயிரிழந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினராக முன்னிலையாவதற்கு அனுமதி கோரி ஓமல்பே சோபித தேரர் ஹற்றன் நீதிவான் நீதிமன்றில்கோரிக்கைமனுவொன்றை இன்று தாக்கல்செய்துள்ளார்.

இலங்கைக்கே உரித்தான கருஞ்சிறுத்தை ஒன்று கடந்த மே மாதம் 26 ஆம் திகதி லக்ஸபான - வாழைமலை தோட்டத்தில் பொறியில் சிக்கி உயிரிழந்தது. இது தொடர்பாக நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் ஹற்றன் நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்திருந்த அறிக்கை இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஸ்ரீபோதிராஜ மன்றம் மற்றும் சுற்றாடல், கலாசார, கல்வி மத்திய நிலையம் சார்பில் நீதிவான் முன்னிலையில் ஆஜரான தரப்பினர் தமது விடயங்களைச் சமர்ப்பித்திருந்தனர். இரு தரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதவான், இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினர் முன்னிலையாவது தொடர்பான நிலைப்பாட்டை எதிர்வரும் ஒக்டோபர் 28 ஆம் திகதி அறிவிப்பதாகவும் இதற்கு முன்னதாக இது தொடர்பில் விடயங்கள் ஏதுமிருந்தால் அதனை எழுத்துமூலம் நீதிமன்றத் தில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ரி-3)

## மண் ஏற்றச் சென்றவரை இழுத்துச் சென்ற முதலை

மாட்டு வண்டியில் மண் ஏற்றச் சென்ற ஒருவரை முதலை இழுத்துச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் மட்டக்களப்பு கறுத்தப்பாலம் ஆற்றில் இடம்பெற்றுள்ளது. கொடுவாமடு, காளிகோயில் வீதியைச் சேர்ந்த 44 வயதுடைய கதிர்காமத்தம்பி மயில்வாகனம் என்பவரே முதலையால் இழுத்துச் செல்லப்பட்டு காணாமற் போயுள்ளார் என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக் காலை கறுத்தப்பாலத்திற்கு அருகில் மாட்டு வண்டியில் சென்று ஆற்று மண் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே, அவரை முதலை இழுத்துச் சென்றுள்ளது.

ஆற்றுப் பகுதியில் மாட்டுவண்டியும், மாடுகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் காணாமல் போனவரைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும், உறவினர்களும் ஈடுபட்டுள்ளனர். (ரி-1)

# குருதி பரிசோதனை கட்டணங்கள் தொடர்பில் வர்த்தமானி வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 30

டெங்கு நோய் மற்றும் குருதி மாதிரியிலுள்ள கலங்களின் எண்ணிக்கை தொடர்பான பரிசோதனைகளுக்கு அதிக கட்டணங்களை அறவிடும் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வு கூடங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

டெங்கு குருதிப் பரிசோதனைக்கான அதிகபட்ச கட்டணம் தொடர்பிலான சிறப்பு வர்த்தமானி நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்டது.

இதனடிப்படையில், எப்.பி.சி பரிசோதனை எனப்படும் முழு குருதிக் கல எண்ணிக்கை பரிசோதனை கட்டணமாக 400 ரூபா அறவிடப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு பரிசோதனைக்கு 1,200 ரூபா அதிக பட்ச கட்டணமாக அறவிடப்பட வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க கருத்துத் தெரிவித்ததாவது;

'டெங்கு காய்ச்சலுக்கான குருதிப் பரிசோதனைக்கு அதிக கட்டணம் அறவிடப்படுவதாக பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் உள்ள பரிசோதனை கூடங்களில் சோதனைகளை மேற்கொள்ளவென புதிய கட்டணம் தொடர்பான வர்த்தமானியை தற்போது வெளியிட்டுள்ளோம்.

வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டமைக்கு மாறாக அதிகமாக கட்டணம் அறவிடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதிகமாக கட்டணங்களை அறவிடும் நிலையங்கள் தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடுகளை முன்வைக்க முடியும். இதன் மூலம் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.(ஐ)



# கனடா தீ விபத்தில் தமிழ் சிறுமி உயிரிழப்பு

மொன்றியல், ஜூலை 30

கனடாவில் இடம்பெற்ற தீ விபத்தில் 12 வயதுடைய தமிழ் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். கனடா – மொன்றியல் லாஸ்ஸல் பொரோ பகுதியில் நேற்றுக்காலை இச் சம்பவம் இடம்பெற்றுயள்ளது. தீவிபத்து ஏற்பட்ட வீட்டின் அடித்தளத்தில் சிக்கிய சிறுமி தீயணைப்பு வீரர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தீக்காயங்கள் மற்றும் புகையை சுவாசித்தமை காரணமாக சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுமியின் 18 வயதான சகோதரியும் 10 வயதான சகோதரனும் வீட்டுக்கு வெளியே இருந்துள்ளனர். அவர்கள் இருவரும் அத்தருணத்தில் பாதுகாப்பான இடத்திற்கு தப்பிச் சென்று விட்டனர் என்று கூறப்படுகிறது. இதனிடையே, மரணச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாயும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் அந்நாட்டு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்த விபத்தையடுத்து அந்த பகுதியில் உள்ள வீடுகளின் அனைத்து தளங்களிலும் புகை எச்சரிக்கை கருவி பொருத்தப்பட்டு, அவை முறையாக செயற்படுகின்றனவா? என்பதை பரிசீலிக்க வேண்டுமென பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர். (ரி1)



## அஸ்திரேலிய மருத்துவமனையிலிருந்து இழுத்துச் செல்லப்பட்ட பிரியா முருகப்பன்

கான்பரா, ஜூலை 30

அவுஸ்ரேலியாவிலிருந்து நாடு கடத்தப்படுவதை எதிர்த்து வரும் இலங்கைத் தமிழ் பெண், எல்லைப் படை காவலர்களால் ஆஸ்திரேலிய மருத்துவமனையில் இருந்து இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கிறிஸ்மஸ் தீவில் தனது கணவர் நடேஸ் மற்றும் அவரது இரண்டு குழந்தைகளுடன் ஒரு நாளைக்கு 20,000 டொலர் செலவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரியா முருகப்பன், 10 நாட்களுக்கு முன்பு கடுமையான வயிற்று வலியுடன் ஆஸ்திரேலிய பெர்த்தின் பியோனா ஸ்டான்லி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

ஒரு ஹோட்டலில் இரண்டு கூடுதல் நாட்கள் கண்காணிக்கப்பட்ட பின்னர் வெள்ளிக்கிழமை தடுப்பு மையத்திற்குத் திருப்பித் அனுப்பப்படுவார் என்று பிரியாவிடம் கூறப்பட்டது என அகதிகள் சட்டத்தரணிகள் கூறுகின்றனர். ஆனால் தமிழ் அகதிகள் கவுன்சில் செய்தித் தொடர்பாளர் அரன் மயில்வாகனம் கூறுகையில், கடந்த புதன்கிழமை 15 எல்லை காவல் படையினரால் பிரியா வலுக்கட்டாயமாக மருத்துவமனையில் இருந்து அகற்றப்பட்டார்.

கிறிஸ்மஸ் தீவில் மேற்கொள்ள முடியாத சி.டி ஸ்கானுக்காக அவர் பிரதான நிலப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்று அவர் கூறினார். "பிரியா குறைந்தபட்சம் 10 காவலர்களால் இழுத்துச் செல்லப்பட்டபோது நான் அவருடன் பேசினேன், எல்லைப் படை பிரியாவிடம் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றார் என்று கூறியது" என மயில்வாகனம் கூறியுள்ளார். (ரி1)

## 10,000 இலங்கையர்கள் தொழில் வாய்ப்பு இழப்பு

கொழும்பு, ஜூலை 30

மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளில் உள்ள சுமார் 10,000 இலங்கையர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்ப எதிர்பார்ப்பவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள ரன்தெனிய தெரிவித்துள்ளார்.

சுமார் 40,000 இலங்கைத் தொழிலாளர்கள் நாடு திரும்புவதற்கு கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ரி2)

# போர்க் காலத்தில் அழிவடைந்த கத்தோலிக்க ஆலயம் சீரமைப்பு

பளை,ஜூலை 31.

போர் காலத்தில் அழிவடைந்த கத்தோலிக்க மக்களின் புனித யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை. புனித ஆரோக்கிய அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயம் சீரமைக்கப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

ஆலயம் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் நடைபெறவுள்ள நவநாள் உற்சவத்துக்கு முன்னர் திறக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

முகமாலை புனித வேளாங்கண்ணி மாதா ஆலயம் ,குருமார் வாசஸ்தலம்,, குருமார் பயிற்சி பாடசாலை முகமாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை போன்றவை கடந்த 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற போர் வேளையில் முற்றாக அழிவடைந்து கற்குவியலாகக் காணப்பட்டன.

கிளிநொச்சி கல்வி வலயத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக அழிவடைந்த பாடசாலை சீரமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

கத்தோலிக்க மக்கள் மேற்கொண்ட முயற்சியால். 2018 ஆம் ஆண்டு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

அதன் பின்னர் ஆலயத்துக்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பூர்த்தியடையும் ஆலயம் நிலையில் காணப்படுகிறது. (ஜ9)



## ஆயுதங்களுடன் 2 இளைஞர்கள்...

இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து கூரிய ஆயுதங்களும் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
கோப்பாய் பகுதியில் நேற்று இரவு சந்தேகத்துக்கு இடமான முறையில் இளைஞர் குழு ஒன்று கூடி உள்ளதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்தது.
இதனையடுத்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அந்த இளைஞர் குழு அவ்விடத்தில் இருந்து தப்பித்துச் செல்ல முற்பட்டுள்ளனர்.
இதன்போது பொலிஸார் துரத்தியதில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.அவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து இரும்புக் கம்பிகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.
அத்துடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.
கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(அ,20)

## அதிகாரப் பகிர்வுக்கு...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,
" அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தையும், அதிகாரப்பகிர்வையும் நாம் ஏற்கவில்லை. அதற்கு இன்றளவிலும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றோம். 13 இல் நாட்டில் இருந்த சமவாழ்வு இல்லாமல்போய், வீண் பிரச்சினைகள்தான் உருவாகின. எனவே, 13 என்பது தீர்வுப்பொறிமுறையாக அமையாது.
வடக்கு மக்களுக்கு 13 ஆவது திருத்தம் முக்கியமல்ல, உண்பதற்கு உணவு இருக்க வேண்டும், வாழ்வதற்கு வீடு வேண்டும். இவற்றுக்கான தீர்வை வழங்கலாம். காணி பிரச்சினை இருந்தால் அது தொடர்பிலும் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி தீர்த்துக்கொள்ளலாம்.
இதனை விடுத்து தன்னாட்சியில் தொங்கிக்கொண்டிருப்பது நியாயமில்லை. தமிழர்களுக்கு ஒரு வடிகால் கூட அமைத்துக்கொடுக்காத கூட்டமைப்பு தன்னாட்சி கோருவது வெட்கக்கேடான செயலாகும். தேர்தல் காலங்களில் மக்களை திசைதிருப்புவதற்காகவே 13 பற்றியும், உரிமை குறித்தும் பேசுகின்றனர்." என்றார்.(அ,44)

## வாக்களிப்பு குறையவே...

இம்முறை பொதுத்தேர்தலில் மிக குறைந்தளவு வாக்குகளே பதிவாகும் வாய்ப்புகள் உள்ளன. கொரோனா தொற்று பரவலினால் கணிசமான முதியவர்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்டவில்லை என்றும், அதே வேளை, தெரிவு செய்வதற்கு இருக்கின்ற வாய்ப்புகள் குறித்த ஏமாற்றத்தினாலும் பலர் வாக்களிப்பைத் தவிர்க்க நினைக்கின்றனர் என்றும் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.(அ)

## 2 ஆம் திகதி நள்ளிரவுடன்...

பக்ச ஆகியோர் மும்முனைகளில் பிரசாரங்களை முன்னெடுத்துவருகின்றனர்.
அத்துடன், ஜனாதிபதி தேர்தலின்போது கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கிய சிவில் அமைப்புகளும், கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளும் சிங்கள, பௌத்த மக்கள் மத்தியில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கோரி பரப்புரையை முன்னெடுத்துவருகின்றன.
மறுபுறத்தில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. தற்போது பல தொகுதிகளுக்கும் பயணம் மேற்கொள்ளும் சஜித் பிரேமதாச 2ஆம் திகதி கொழும்பு மாவட்டத்தை மையப்படுத்தி பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார்.
அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி உட்பட இதர கட்சிகளும் வெற்றி இலக்கை அடைவதற்காக இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக இறங்கியுள்ளன. எனினும், கடந்தகாலங்களைபோல் இறுதிநாளன்று இம்முறை பிரமாண்ட கூட்டங்கள் நடைபெறமாட்டா. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பான முறையில் கூட்டங்களை நடத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (அ-44)

## ஆசனங்கள் 196...

ளது. அன்றைய தினம் வாக்களிப்பு முடிவடைந்ததும் மறுநாள் காலை 8 மணி முதலே வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும். அன்று நள்ளிரவுக்குள் நாட்டை ஆளப்போவது யாரென்பது தெரியவரும்.
பொதுத்தேர்தலில் 196 ஆசனங்களை ( தேசியப் பட்டியல் ஆசனங்களைத் தவிர்த்து) இலக்கு வைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 3 ஆயிரத்து 682 பேரும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 3 ஆயிரத்து 800 பேருமாக மொத்தம் 7 ஆயிரத்து 452 பேர் போட்டியிடுகின்றனர்.
ஒரு கோடியே 62 லட்சத்து 63 ஆயிரத்து 874 பேர் வாக்களிப்பதற்கு தகுதிப்பெற்றுள்ளனர்.
பொதுத்தேர்தலுக்கான 12 ஆயிரத்து 985 வாக்களிப்பு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.அத்துடன் நாடு முழுவதும் 71 வாக்கெண்ணும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-44)




## டிப்பரோடு மோதிய...

ளார். வரணி வடக்கைச் சேர்ந்த பிரான்சிஸ் சினேஸ் (வயது 26) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது,
வரணிப் பிரதேசத்தில் தேர்தல் பிரசுரங்கள் ஒட்டப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் வரணிக்குச் சென்றுள்ளனர். அந்தவேளையில்.
பொலிஸ் வாகனத்தைக் கண்டுவிட்டு, தலைக்கவசம் அணியாத நிலையில் அங்கு நின்ற இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை இயக்கிக்கொண்டு வேகமாகச் சென்றுள்ளனர்.
அப்போது மணலுடன் சென்ற டிப்பர் வாகனம் ஒன்று, வரணி மருத்துவமனைக்கு முன்பாக சமிக்ஞை விளக்கினை எரியவிட்டு நிறுத்த முற்பட்டது.
இதனால் நிலை தடுமாறிய மோட்டார்சைக்கிள் டிப்பருடன் மோதியது.சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர்.
காயமடைந்த இருவரும் அம்புலன்ஸ் மூலம் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு ,அங்கிருந்து யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர், அவ்வாறு கொண்டு செல்லும் வழியிலேயே காயமடைந்த இளம்குடும்பஸ்தர் உயிரிழந்தார். மற்றவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சாவடைந்தவரின் சடலம் மீண்டும் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.
இவரின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் இன்று வியாழக்கிழமை அறிக்கையைத் தாக்கல் செய்தனர்.
அதனைப் பார்வையிட்ட நீதிவான் , பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அந்த அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
டிப்பர் வாகனச் சாரதியைக் கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தியபோது சாரதியைப் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது. (அ 9)

## தீர்வு கொடுக்காமை...

தார். அரசியல் பயணத்தில் திருப்தியடையக்கூடிய அதேபோல் சாத்தியமற்றுபோன விடயங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:
" 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதுதான் அரசியலில் முதலாவது மகிழ்ச்சியான தருணம்.
கொள்கை அடிப்படையில் அரசியலை முன்னெடுப்பதும், கல்வி அமைச்சராக, இளைஞர் விவகார அமைச்சராக, கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்த காலப்பகுதியில் முன்னெடுத்த வேலைத்திட்டங்களை நினைக்கும்போதும் திருப்தியடையக்கூடியதாக இருக்கின்றது.இளைஞர்களுக்கு உரிய இடம் வழங்கப்பட்டது. கல்வித்துறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. கைத்தொழில் துறையும்கட்டியெழுப்பப்பட்டது. கட்சிக்கு நெருக்கடி ஏற்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கட்சியுடனேயே இருந்துள்ளேன். இலங்கை, இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது ஏற்பட்ட பிரச்சினைகள், பிரேமதாசவுக்கு குற்றப்பிரேரணை வந்தபோது ஏற்பட்ட நெருக்கடிகள் ஆகியவற்றின் போதுகூட கட்சியை விட்டுச்செல்லவில்லை. கட்சியுடனேயே சங்கமித்திருந்தேன். பிரேமதாசவின் மறைவின் பின்னர் ஆட்சியை நிலைகுலையவிடவில்லை. 2001 இல் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டது. துறைமுகங்கள் இயங்கின. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சந்தர்ப்பங்களிலும் என்னால் முடிந்தவற்றை செய்துள்ளேன். இவை திருப்திகரமாக இருந்தன.
அதேவேளை, அரசியல் பயணத்தில் சில விடயங்களை செய்வதற்கு முயற்சித்தும் , நிறைவேற்றமுடியாமல் சாத்தியமற்றுபோன சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.
குறிப்பாக வேறு கட்சிகளின் ஜனாதிபதிமாருடன் இரண்டு தடவைகள் இணைந்து பயணிக்க முயற்சித்தபோதும் அது 100 வீதம் வெற்றியளிக்கவில்லை. சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடும்போதும் அது தோல்வியில் முடிவடைந்தது. நல்லாட்சியில் சுதந்திரக்கட்சியால் ஏற்பட்ட சிக்கலை தீர்ப்பதற்கான திட்டமும் கைகூடவில்லை. அதே போல் தேசிய இனப்பிரச்சினைக்கும் அரசியல் தீர்வொன்றை காணமுடியாதுள்ளது. இவையே சாத்தியமற்றுபோன விடயங்களாக கருதுகின்றேன்." என்றார்.(அ-44)

# சபதம் முடித்த புரோட்

## சச்சின் பாராட்டு





லண்டன், ஜூலை 30

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அபாரமாக செயல்பட்டு தொடர் நாயகன் விருது பெற்ற இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் புரோட் தான் எடுத்த சபதத்தை வெற்றிகரமாக முடித்திருக்கி றார் சச்சின் டெண்டுல்கர் பாராட்டியுள்ளார்.

இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவுகள் அணிகளி டையே 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. சவுத்தாம்ப்டனில் நடந்த முதல் டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் 4 இலக்குகள் வித்தியாசத்தில் வென்று முன்னிலை பெற்றது. இந்தப் போட்டியில் தன்னை உள் வாங்காமை குறித்து ஸ்டுவர்ட் புரோட் வெளிப் படையாகவே கடும் அதிருப்தி தெரிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், மான்செஸ்டரில் நடந்த 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அந்த போட்டியில் புரோட் 2 இன்னிங்ஸிலும் தலா 3 இலக்குகள் கைப்பற்றி அசத்தினார். இங்கி லாந்து அணி 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தி 1;1 என சமநிலை ஏற்படுத்தியது. பரபரப்பான 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்டில், 399 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் 2 ஆவது இன்னிங்ஸை விளையாடிய மேற்கிந்தியத் தீவுகள் வெறும் 129 ஓட்டங்களுக்கு சுருண்டு 269 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இந்த டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் 6 இலக்குகள், 2 ஆவது இன்னிங்ஸில் 4 இலக்கு கள் என 10 இலக்குகளை வீழ்த்தியதுடன், முதல் இன்னிங்ஸில் அதிரடியாக 62 ஓட்டங்கள் விளாசிய புரோட் ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது பெற்றார்.

இங்கிலாந்து அணி 2;1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இங்கிலாந்து அணி யின் வெற்றிக்கு காரணமாக இருந்ததுடன், டெஸ்ட் போட்டிகளில் 500 இலக்கு என்ற சாதனை மைல்கல்லை கடந்துள்ள பிரோட்டுக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. இது குறித்து சச்சின் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்ததாவது:

தொடரை வென்ற இங்கிலாந்து அணிக்கு வாழ்த்துக்கள். நான் ஏற்கனவே சொல்லியபடி ஸ்டுவர்ட் புரோட் ஓர் இலட்சியத்துடன் களமி றங்கி தான் எடுத்த சபதத்தை முடித்துள்ளார். 500 இலக்குகள் மைல்கல்லை எட்டிய அவருக் கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது அற்புதமான சாதனை என்று வெகுவாகப் பாராட்டி உள்ளார். டெஸ்ட் போட்டிகளில் அதிக இலக்குகளை வீழ்த்திய வீரர்களின் பட்டியலில் பிரோட் 7 ஆவது இடத்தை பிடித்துள்ளார் - என்றார். (ரி2)

# சச்சினுக்குத் தெரியாது!

புதுடில்லி, ஜூலை 30

லிட்டில் மாஸ்டர் என்று அழைக்கப்படும் சச்சினுக்கு சதத்தை இரட்டைச் சதமாகவும் முச்சதமாகவும் மாற்றத் தெரியவில்லை என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

சச்சின் 6 இரட்டைச் சதங்களை டெஸ்ட் கிரிக்கெட்டில் எடுத்துள்ளார், ஓர் இரட்டைச் சதம் ஒரு நாள் போட்டியில் எடுத்துள்ளார். சச்சின் டெஸ்ட் போட்டிகளில் அதிகபட்சமாக 248 ஓட் டங்களை எடுத்துள்ளார் 250 ஐ தொடட்டதில்லை.

இது தொடர்பில் கபில்தேவ் மேலும் தெரிவித்துள்ள தாவது:

சச்சினிடம் வேறொரு வீரரிடம் நான் காணாத அசாத்திய திறமைகள் இருக்கின்றன. சதங்கள் எப் படி எடுப்பது என்பதை சச்சின் நன்றாக அறிந்திருக்கி றார், ஆனால் அவர் கருணையற்ற துடுப்பாட்ட வீரராக மாறவில்லை. கிரிக்கெட்டில் அவர் அனைத் தையும் பெற்றார். சதம் எப்படி எடுப்பது என்பது அவருக்குத் தெரிந்திருந்தது, ஆனால் அதை இரட் டைச் சதமாகவோ முச்சதமாகவோ அவரால் மாற்ற முடியவில்லை.

வேகப்பந்து வீச்சாளர், ஸ்பின்னர் என்று யாராக இருந்தாலும் ஒவ்வொரு பந்துப் பரிமாற்றத்திலும் 4 ஓட்டங்கள் அடிக்கக் கூடிய சச்சின் குறைந்தது 3 முச்சதங்கள் 10 இரட்டைச் சதங்களை அடித்திருக்க வேண்டும் என்றார் கபில்தேவ்.

சச்சின் 200 டெஸ்ட் போட்டிகளில் 15,921 ஓட்டங் களை எடுத்துள்ளார். 15,000 ஓட்டங்களைக் கடந்த ஒரே வீரர், ஆனால் உள்நாட்டு கிரிக்கெட்டில் கூட அவர் பெயரில் ஒரு முச்சதம் இல்லைஎன்றார்.(ரி2)

# பொண்டிங் போன்றவர் விராட் கோலி

## பிரட் லீ கூறுகின்றார்


மெல்பேர்ன், ஜூலை 30

விராட் கோலி மற்றும் ரிக்கி பொண்டிங் இருவருமே மிகவும் தைரியமான ஆள்கள் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சா ளர பிரட் லீ. நேர்காணல் ஒன்றில் விராட் கோலியின் அணித் தலைமை பொறுப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

சில நேரங்களில் நாம "ரிஸ்க்" எடுக்க வேண்டியது இருக்கும். அந்த ரிஸ்க்தான் அணியை வெற்றிக்கோ அல்லது தோல் விக்கோ அழைத்துச் செல்லும். அப்படி ஒரு ரிஸ்க்கை எளிதாக எடுக்கும் தன்மை உடையவராய் கோலி திகழ்கிறார்.

டோனியிடம் இருந்து அணியை பொறுப் பாக வாங்கி சிறப்பாகச் செயல்பட்டார் கோலி. அணித் தலைமைப் பதவியில் மட்டுமல்ல துடுப்பாட்டத்திலும் விராட் கோலியிடம் பொண்டிங்கை போல் ஒரு பண்பு இருக்கிறது. சக வீரர்களை சரியாக புரிந்து கொண்டு களத்தில் அவர்களிடம் என்ன தேவையோ அதை வாங்கி விடு வார் அதில் ரிக்கி பொண்டிங் சிறந்தவர். அதேபோன்று விராட் கோலியிடமும் அந்த தன்மையைப் பார்க்கிறேன் - என் றார். (ரி2)



# ரசனை இல்லாதவன்!

ஒரு மனிதன் திருமணம் செய்து கொள்ள நல்ல அழகான பெண்ணைத் தேடிக் கொண்டி ருந்தான்.

அவனை அணுகிய ஒரு தரகன், "ஒரு பணக்கார விதவை இருக்கிறாள். மிகவும் அழகானவள். உன்னைவிட ஒன்றிரண்டு வயது பெரியவளாக இருப்பாள். ஆனால் பார்த்தால் அப்படித் தெரியாது. அவளுடைய அழகை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. என்னுடன் வா, அவளைக் காட்டுகிறேன்." என்று சொன்னான்.

தரகனுடன் போய் பெண்ணைப் பார்த்தான் அவன். அவனால் அவனது கண்களையே நம்ப முடியவில்லை. அவன் வாழ்க்கை யில் அதுவரை அவ்வளவு அசிங்க மான பெண்ணைப் பார்த்ததில்லை.

ஒரு கண் ஒரு பக்கம் பார்க்கும் போது, மறுகண் அடுத்த பக்கம் பார்த்து கொண்டிருந்தது. மூக்கு கோணலாக இருந்தது. பற்கள் வெளியில் தெத்திக் கொண்டி ருந்தன. அவள் தலையில் இருந்தது போலி முடி என்று அப்பட்டமாகத் தெரிந்தது. அவளுடைய ஒரு கால் மற்றொரு காலை விட குட்டை யாக இருந்தது. குமட்டிக் கொண்டு வந்தது அவனுக்கு.

தரகனின் சட்டையைப் இழுத்துப் பிடித்து அவன் காதருகில் கிசு கிசுத்தான்...

"இவளையா அழகு என்று சொன்னாய்?"

"நீ சத்தமாகவே பேசலாம். அவள் முழுச் செவிடு. உனக்குக் கலா ரசனையில்லா விட்டால் நான் என்ன செய்ய முடியும்? உனக்கு பிக்காசோவின் கலை பிடிக்கும் என்று நினைத்தேன். நீ இப்படி ரசனை கெட்டவனாக இருப்பாய் என்று யாருக்குத் தெரியும்?"

-ஓஷோ

# கல்வியின் ஒளியே

## 4

நீ மீண்டும் மீண்டும் வருக!



## ஈஸ்வரபாதம் சரவணபவன்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## 35

வருடங்களாக
ஓயாத
விலைபோகாத
தலைமை

| | | |
|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி<br>Illankai Tamil Arasu Kachchi | | X |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | X4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 30.07.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.